**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070220225819

Volume: 7

Issue: 2

Month: October

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.07.2022

Accepted: 11.09.2022

Published: 01.10.2022

Citation:
Vimalsankar, Sangaranathan. "The Tradition of Parai Instrument and Its Role." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 2, 2022, pp. 12–17.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i2.5819

*Corresponding Author:
rahavan127@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Tradition of Parai Instrument and its Role

**Sangaranathan Vimalsankar**
*Lecturer, Department of Music*
*University of Jaffna, Srilanka*
*https://orcid.org/0000-0002-8206-5072*

**Abstract**
Parai is an ancient musical instrument of Tamils. It is generally played by Tamils living in the north-eastern regions of Sri Lanka in social, religious events, rituals and entertainment. As a mother instrument, from the Sangam period till today, they look at this as the first instrument from the orgin of other musical instruments. Since the Sangam period, this instrument was used to announce news and government orders to the people. Various sounds were used on the drums as Sign language symbols to exchange messages from one village to another.

**Key Words**
Drum, Parai, Role of the Parai, Tradition, Environment, Society, Tamil Music

**References**

1. Valarmathi, M. 2009. *Parai*, Amrutha Pathipagam.
2. Jeyakanthan, S., Paraivathiya Marabu, Department of Music, Ramanathan Fine Arts Academy.
3. Kannan, K. 1994. *Pandai Thamilarin Olivunarvum, Esaivunarvum*, New Century Book House.
4. Mahendran, C. 1999. *Tamilar Muzhaviyal*, Ramanathan Academy.
5. Inbamohan, V. 2012. *Kizhakizangai Sadangugal*, Kumaran Puthaga Illam.
6. Karthikesu Sivathambi, Jaffna, Samugam. 2000. *Panpadu, Karuthunilai*, Kumaran Puthaga Illam.

# பறை வாத்திய பாரம்பரியமும் அதன் வகிபாகமும் பற்றிய ஆய்வு

***சங்கரநாதன் விமல்சங்கர்***
சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச்சுருக்கம்***

*தமிழர்களின் தொன்மைக்கால இசைக்கருவியாகப் பறை என்னும் இசைக்கருவி காணப்படுகின்றது. இது தோற்கருவி வகையாகும். பொதுவாக சமூக, சமய நிகழ்ச்சிகள், சடங்குகள், பொழுதுபோக்குகள் பலவற்றிலும் இலங்கையின் வடகிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் இதனை இசைக்கின்றனர். தாய்க்கருவியாகச் சங்ககாலம் முதல் இன்றுவரை ஏனைய தோற்கருவிகளின் பிறப்பிடத்தின் முதற்கருவியாக இதனையே நோக்குகின்றனர். சங்ககாலத்திலிருந்து இக்கருவியை செய்திகளை, அரச கட்டளைகளை மக்களுக்கு அறிவிப்பதற்காகப் பயன்படுத்தியிருந்தனர். ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊரிற்கு செய்திகளைப் பரிமாற்றிக்கொள்வதற்கும் சங்கேத மொழிக் குறியீடுகளாக பல்வேறு ஒலிகளை பறையில் எழுப்பி பயன்படுத்தியிருந்தனர்.*

***திறவுச் சொற்கள்:*** *பறை, வகிபாகம், பாரம்பரியம், சூழல், சமூகம், தமிழிசை*

பன்முகப்பட்ட பறைகள் பல்வேறு விதமான மங்கல அமங்கல நிகழ்வுகளிற்கெல்லாம் பயன்படுத்தப்பட்டதாக அறியப்படுகிறது. இருந்தபோதிலும் காலப்போக்கில் இவ்வாத்தியத்தின் இசையில் புத்தாக்க முயற்சிகளோ அபிவிருத்தி நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படாத காரணத்தால் அரச சபையிலிருந்து விலக்கப்பட்டதுடன் சமுகத்திலும் அதன் செல்வாக்கை இழந்துபோனது. பின்நாளில் அமங்கல நிகழ்வுகளிற்கு அதிகம் இவ்வாத்தியத்தை வாசித்தமையால் இது ஒரு அமங்கல வாத்தியமாகவும் இதனை வாசிப்போர் கீழ் சாதியினர் எனவும் கருதப்பட்டனர். இருப்பினும் தமிழச் சமுகத்தினர் இன்று இதனையே தமது கலாசாரத்தின், பாரம்பரியத்தின் தொன்மை மிக்க அடையாளமாக அறிமுகப்படுத்த முயற்சிக்கின்றனர்.

உலக இசையில் பறை எனும்போது ஆதிமனிதக் குழுமங்கள் எங்கெல்லாம் வாழ்ந்தனவோ அங்கெல்லாம் பறைக் கருவியை ஏதோ ஒரு வடிவத்தில் காணலாம். ஏழு ஸ்வரங்கள் என்பது உலகப் பொதுவானது. அதேவகையில் பறையின் உலகரீதியான பரம்பல் ஒரேமாதிரியாகக் காணப்படுகின்றது. மேலும் ஒவ்வொரு நாட்டினதும் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்பப் பெயர்களும் பயன்பாடும் மாற்றம் பெறலாயின. பொதுவாகச் சமூக, சமய நிகழ்ச்சிகள், சடங்குகள், பொழுதுபோக்குகள் பலவற்றிலும் பறை மேளம் ஒலிக்கிறது.

உலகின் பல்வேறு நாடுகளின் மலைவாழ் மக்களின் செய்தி தொடர்பு சாதனமாக பறை எனும் தாளக்கருவி இருப்பதுடன் வாழ்வின் பல்வேறு செயற்பாடுகளில் இணைந்துள்ளது என்றும் இதைப் பறை மொழி (Drum language) என்று மேல்நாட்டு ஆய்வறிஞர்கள் கூறுகின்றனர்.

பௌறா (C.M.Bowra) பூர்வீகக்குடிகளின் இசைக்கருவிகள் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களது இசை முறையில் இசைக் கருவிகளை இசைப்பதில் வரையறையான ஒழுங்குமுறை இருந்ததாகக் தெரியவில்லை. ஆயினும் அவர்களது நடவடிக்கைகளில் பறை மேளம் முக்கிய பங்கை வகித்து வந்துள்ளது என பிக்மிஸ் (நாடோடிகள்) சாதியர், வடஅவுஸ்திரேலிய பூர்வீகக் குடிகள், ஆபிரிக்க நீக்ரோக்களை அடிப்படையாக வைத்துக் கூறுகின்றார்.

ஈழத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் பறை மேளக் கூத்துக் காணப்படுவது போன்று சிங்களவர் மத்தியில் பறை, நடனம், தவில் என்ற பெயருடன் சப்ரகமுவா மாகாணத்தில் காணப்படுவதாக இ.பாலசுந்தரம் குறிப்பிடுகின்றார். இந்தியாவைப் பொறுத்தவரையில் அநேகமான வட தென் பாகங்களை உள்ளடக்கிய மாநிலங்கள் பலவற்றிலே பல வடிவங்களில் பறை இன்னும் கிராமியம் சார்ந்தும் சாஸ்திரியம் சார்ந்தும் வழக்கிலுள்ளதை அவதானிக்க முடிகின்றது. பறை வாசிப்பவரை பறையர் என அழைப்பது இலங்கை இந்தியாவைத்தவிர ஏனைய நாடுகளில் வழக்கில் இல்லை எனவும் முனைவர் வளர்மதி குறிப்பிடுகின்றார்.

| பறை காணப்படும் இந்திய மாநிலங்கள் | வழக்கில் காணப்படும் பறை |
|---|---|
| தமிழகம் | தப்பு, தம்பட்டம் |
| ஆந்திரா | ரோன்ஸா, டோல், புர்ர, சூரியப்பறை, சந்திரப்பறை |
| கர்நாடகம் | டாஃப் |
| கேரளா | செண்டை, துடி இடக்கா |
| ராஜஸ்தான் | கேரோ, பாபுஜிக், மாதே, நிஸ்ஸான் |
| காஷ்மீர் | தும்பத்நாரி |
| கோவா | குமட் |
| அஸ்ஸாம் | கர்ரம் |
| மகாராஷ்ரம் | டோல் |
| வங்காளம் | ஸ்ரீகோல் |
| ஒரிசா | செங்கு |
| மணிப்பூர் | புல் |

இவைதவிரவும் திபெத், நேபாளம், பூபாளம், லதாக் போன்ற மலைப் பிரதேசங்களில் சாம் எனும் நடனத்திற்கு “க்னர்” என்ற பறை முழக்கப்படுவதாகவும் திபெத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் “டமரு, தோட்நகர்” என்ற பறையும் பயன்படுத்தப்படுவதாகவும் வளர்மதி குறிப்பிடுகின்றார். உலகம் பூராகவும் செய்திப் பரிமாற்றத்திற்கு பறை பயன்பட்டுள்ளதை Talking Drum, Drum Language எனவும் அழைத்துள்ளதாக மேலைத்தேய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மத்திய ஆபிரிக்கக் காடுகளில் வாழும் தும்பா இன மக்களிடையே Talking Drum (பேசும் பறை) இருந்துள்ளதாக J.F கேரிங்கடன் Telling Drum of Africa (New York Negro Universities Press 1949-1969) என்ற நூலிலே குறிப்பிடுகின்றார். அத்தோடு அங்கு காணப்படும் பாண்டு இன மக்கள் செய்திப்பரிதாற்றத்திற்கு பறைகளில் ‘Codes’ முறைகள் குறித்த இசைப்புமூலம் செய்தியைச் சொல்வதாகவும் மேலும் செய்திகள் High Tone இல் சொல்வதற்கும் Low Tone இல் சொல்வதற்குமாக பறை வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் லோங்க்குண்டே (Lonkundo) என்ற பறையை அவர்கள் கையாள்வதாகவும் குறிப்பிடுகின்றார். அத்துடன் இங்கு பெண்கள் பறை அடிப்பதில்லை எனவும் ஆயினும் செய்தியை நன்கு விளங்கிக் கொள்வதாகவும் குறிப்பிடுகின்றார்.

ஆபிரிக்க, மெக்ஸிக்கோ பகுதிகளில் உள்ள சில பழங்குடிகளிடமும் 3 மீற்றர் நீளமான மரத்தாலான உருளை கொண்ட பறைகள் காணப்படுகின்றன. அமெரிக்காவிலே தென் கிழக்குப் பகுதிகளில் தண்ணீர் பறை (water drum) எனப்படும் பறை வழக்கில் இருந்துள்ளது. இது சுடுமண்ணால் செய்யப்பட்ட பாத்திரத்தில் நீர் நிரப்பி அதனைத் தோலால் மூடிக்கட்டி இசைக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில் இவ்வாத்தியம் முக்கிய இடத்தைப் பெறுவதாகவும் நியூகயானாவில் சிறு பறைகளைத் தாங்கி ஆடும் நடனம் பிரபலமானவை எனவும் நிர்மல் செல்வமணி கூறுகின்றார். அத்தோடு ஆபிரிக்க நாடுகளில் பறைகளின் பயன்பாடு அதிகம் உள்ளதாகவும் அவர்கள் அதனை தெய்வமாகவும் வணங்குவதாகக் கூறுகின்றார்.

தமிழர் இசை வரலாற்றில் தோற்கருவிகளின் தாயாக விளங்கும் பறை இசைக்கருவி தொன்மையும் பெருமையும் மிக்கது. ஆதிமாந்தன் உடைந்த பானை, குடம் ஆகியவற்றின் வாய்களின்மேல் தோலை இழுத்துப் போர்த்தி கைகளாலும், குச்சிகளாலும் முழக்கினான். ஒருமுகப் பறைகளைத் தொடர்ந்து இருமுகப் பறைகள், பன்முகப் பறைகள் தோற்றம் பெற்றன. அக்காலத்தில் முழக்கும் கருவிகள் அனைத்திற்கும் பொதுப் பெயராக "பறை" குறிப்பிடப்பட்டு வந்துள்ளமை பற்றி நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

பறை என்ற சொல் வழக்கானது பற + ஐ = பறை இது பற பற என்று ஒலித்ததன் காரணமாகவே பறை என பெயர் பெறலானது. இதுவே முதன்மைப் பொருளாகவும் கொள்ளப்படுகின்றது. "பறைதல்" என்ற சொல் சொல்லுதல், உரைத்தல், அறிவித்தல் என வழங்கப்பட்டதனால் பறை என்னும் பெயர் ஒலியினடியாகப் பிறந்தது எனவும் இரண்டாம் நிலைப்பொருள் (secondary meaning) கொள்ளப்படுகிறது. இச்சொல் வழக்கு யாழ்ப்பாணத்தில் காணப்படுவது போல மலையாளத்திலும் காணப்படுவதாக முனைவர் வளர்மதி அவர்கள் தமது "பறை" ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பறை என்ற சொல் "பேசு" என்று பொருள்படும். அறை என்ற சொல்லிலிருந்து பறை தோன்றிற்று. அதாவது ப் + அறை = பறை. அறை என்ற சொல் "அடி" அடித்து உரக்க "ஒலியெழுப்பு" என பொருள் கொள்ளப்படும்.

சங்கப்புலவர் "ஓர்த்தது இசைக்கும் பறை" (கலி 92:21) (பழ 37:4) என்று குறிப்பர். இது பேசுவதை இசைக்கவல்ல "பறை" என அர்த்தப்படுகிறது. மேலும் பறையடித்தல் என்ற நாட்டார் சொல் வழக்கானது ஒரு செய்தியைப் பலரிடம் சொல்லித் திரிவதையும் சுட்டிநிற்கின்றது. இது செய்தி அறிவிப்பிற்காய் பயன்படுத்தப்பட்ட பறை என்ற கருவியைக் குறிக்கும் சொல் ஏனைய அறிவித்தல் செயற்பாடுகளுக்கும் பொதுப்பெயராக பயன்படுத்தப்படுவதாய் இருக்கலாம் எனப் "பறை" ஆய்வு நூலில் வளர்மதி குறிப்பிடுகின்றார்.

சங்ககாலத்திலே பெருவழக்காக இருந்த பறைக்கருவியை இசையில் அதன் முக்கியத்துவத்தினை உணர்த்த தொல்காப்பியர் அதனை கருப்பொருளாகக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு கருப்பொருள் என்பது மக்களுக்கு கருத்துக்களை ஊட்ட உதவும் பொருள்.

**"தெய்வம் உணாவே மாமரம் புல்பறை**
**செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப்"**
**(தொல்.பொருள் அகத்திணையியல் 18)**

இதன் சார்பாகச் சங்கத்தில் நிலங்களை வகுத்தபோது ஒவ்வொரு நிலத்திற்கும்

அவர்கள் செய்யும் தொழிலில் பயன்படும் கருவியாகத் தனித்தனியே பறைகள் இருந்து வந்துள்ளன. அந்தவகையிலே குறிஞ்சிக்கு தொண்டகச் சிறுபறையும், முல்லைக்கு ஏறுகோட்பறையும், தாரிப்பறையும் மருதநிலத்திற்கு கிணைப்பறையும், நெய்தலுக்கு மீன்கோட்டுப்பறையும் பாலைக்கு நிரைகோட்பறையும் குறிப்பிடப்படுகின்றன. இவைதவிர ஒரு கட்பறை - பதலை மொந்தையும் கைப்பறைகளாக விரலோறு பறையும் செய்தி அறிவிக்க கோட்பறை முதலியனவும் பயன்பாட்டிலிருந்துள்ளன. நிலவியல் பாகுபாட்டின்படி பறைகளைவகுத்தபோது ஒரு பறை ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களால் குறிப்பிடப்பட்டிருப்பதையும் இலக்கியங்களில் அவதானிக்க முடிகின்றது. மேலும் தனித்தனிக் குழுமங்களாக ஆங்காங்கே வாழ்ந்த பண்டைத் தமிழ் சமூகத்தினர் அவர்களது குழு உணர்வைப் பெற தொழிலுக்குச் செல்லும் முன் பறையை வாசித்துள்ளனர். பின்னர் உள்ளக்கிளர்ச்சியைப் பெற யாழிசையை நுகர்ந்தனர் என கோ.கண்ணன் குறிப்பிடுகின்றார்.

ஆநிரைகளை மேய்ப்பதற்கும் ஏறு தழுவுவதற்கும் ஏறக்கோட்பறையும் முளையில் விளைந்த பயிரை விலங்குகளினின்று காப்பதற்கு தொண்டகப் பறையும் பாலைநிறத்தில் திரிந்த கள்வர் தம்முள் மறைமுகச் செய்தியைப் பரிமாறிக் கொள்வதற்கு ஆறெறி பறையினையும் கழனி விளைனர்க்குச் செய்தி அறிவித்தற்கு அரிப்பறையும் கடலில் மீன் பிடித்தற்கும் மரக்கலங்கள் இயக்குவதற்கும் மீன் கோட்பறையும் பயன்படுத்தப்பட்டன. பெருகிவரும் புனலை (வெள்ளத்தை) அடைக்கவும் உழவர் மக்களை அழைக்கவும் போர்கெழுமாறு வீரர்களை அணிதிரட்டி வெற்றி தோல்வியை அறிவிக்கவும் வயல் நிலங்களில் உழவுவேலை செய்வோருக்கு ஊக்கமளிக்கவும் பயன்பட்டுள்ளன விதைக்க, அறுவடை செய்ய, காடுகளில் விலங்குகளை விரட்ட, மன்னனின் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்க, இயற்கை வழிபாட்டில், கூத்துக்களில், விழாக்களில், இறப்பில் என வாழ்வியல் கூறுகளுடனும் இணைந்து செயலாற்றியுள்ளது இப்பறைக்கருவி.

பறையின் ஓசையானது வன்னோசையாகக் காணப்படுவதன் காரணமாகவும் குச்சிகளால் முழக்கி வாசிக்கப்படுவதன் காரணமாகவும் நீண்டதூரத்தை இவ்வொலிகள் சென்றடைந்தன. அதேவேளை பயம், ஆவேசம், துன்பம், எழுச்சி ஆகிய மனஉணர்வுகளை அதிகம் ஏற்படுத்துவதாக இதிலிருந்து பெறப்படும் ஓசை காணப்படுவதால் இக்கருவி செய்திப் பரிமாற்றத்தில் பெருவழக்காகியதுடன் கிராமியச் சடங்குகள் சார்ந்தும் இன்ப துன்ப நிகழ்வுகளுக்கும் பயன்பட்டு வந்துள்ளது.

அடிப்படையில் பிற தாளக் கருவிகளுக்கு இது அடிப்படைக் கருவியாகவுள்ளது. குறிப்பாக முழவு, முரசு, சிறுமுழா, மண்முழா, கிணை, துடி, தடாரி, பதலை, மந்தரி, எல்லரி, ஆகுளி, மகுளி, பம்பை, சில்லரி, கொட்டு, தட்டை, குளிர் என வளர்ச்சி கண்ட இதன் வடிவங்கள் காலப்போக்கில் மத்தளம், தண்ணுமை போன்றவையாக வளர்ச்சியடைந்து மிருதங்கம் என்னும் அதி உன்னதமான நாத நுணுக்கம் நிறைந்த கருவியாகவும் உயர்ந்து நிற்கின்றது. அத்துடன் உடுக்கை. கெஞ்சிரா போன்ற இதர கருவிகளுக்குள்ளும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. பறைக்கருவி வளர்ச்சியடையவில்லை. ஆயினும் இதனது இசைப்பு நிலையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. உதாரணமாக பறைமுழக்கத்தில் பயன்படுத்தப்படும் தாள முறைகளில் மூன்று லகுத்தாளம். ஐந்து லகுத்தாளம், ஏழு லகுத்தாளம் ஆகிய 4 வகை தாளங்கள் இருப்பதாகவும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் 32 தாள

முறைகள் அறிந்த கலைஞர்கள் உள்ளனர் என்றும் வளர்மதி குறிப்பிடுகின்றார். எவ்வாறிருப்பினும் தமிழிசையில் காணப்படும் 7, 35, 108, 175 என்ற தாள நுணுக்கங்களைக் காணமுடியாது.

**உசாத்துணை நூல்கள்**


1. வளர்மதி.மு, பறை, 2009, அம்ருதா பதிப்பகம்.
2. ஜெயகாந்தன்.சு, பறைவாத்திய மரபு, இசைத்துறை, இராமநாதன் நுண்கலைக்கழகம்
3. கண்ணன். கோ, பண்டைத் தமிழரின் ஒலியுணர்வும், இசையுணர்வும், 1994, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
4. மகேந்திரன்.சி, தமிழர் முழவியல், 1999, இராமநாதன் அக்கடமி
5. இன்பமோகன்.வ, கிழக்கிழங்கை சடங்குகள், 2012, குமரன் புத்தக இல்லம்.
6. கார்த்திகேசு.சிவத்தம்பி, யாழ்ப்பாணம், சமூகம், பண்பாடு. கருத்துநிலை, 2000, குமரன் புத்தக இல்லம்.